**சுகததாஸ தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபை - 2010**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 அபிப்பிராயம்**

---

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, சுகதாஸ தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர சுகததாஸ தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கயுக்கு நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் பிரகாரம் ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாட்டிற்காக நிதியம் ஒன்று உருவாக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு வரையும் அவ்வாறான ஒன்று இடம் பெற்றிருக்கவில்லை.

(ஆ) முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட எனினும் 2010 திசெம்பர் 31 வரையும் பயன்பாட்டிற்கு எடுத்தும் கொள்ளப்பட்ட அதிகாரசபைக்குச் சொந்தமான ரூபா 11,691,001 கிரயமான 3 கைஉழவு இயந்திரங்கள் ஒரு மோட்டார் சைக்கிள் ஏனைய உபகரணங்கள் என்பன கணக்கீட்டு நியமம் 18 இன் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டு குறைபாடு

02 சொத்து விடயங்கள் தொடர்பாக ரூபா 5,420,230 அதிகரித்தும் 02 சொத்து விடயங்கள் தொடர்பாக ரூபா 34,488 குறைத்தும் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 தரப்பினர் தொடர்பாக ரூபா 179,485,765 தொகையான மீதிக்காக மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 43,736,670 தொகையான கடன்பட்டோர் மீதியினுள் ரூபா 3,900,800 தொகையான நானாவித கடன்பட்டோர்களும் மேலும் 19 நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி ஒன்றும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இலங்கை கிறிகட் நிறுவனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 25,933,845 தொகையான கடன்பட்டோர் மீதியும் அம் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அது மொத்த கடன்பட்டோரின் 59% இனை பிரதி நிதித்துவப்படுத்தியது.

(இ) விளையாட்டு ஹோட்டல் தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய முறைப்படி குத்தகை செலுத்தப்படாததன் காரணமாக ரூபா 552,195 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் விளையாட்டரங்கினை ஒதுக்கீடு செய்தல் தொடர்பாக அதிகாரசபைக்கு ரூபா 4,465,941 தொகை கிடைக்க வேண்டியிருந்ததுடன் அதில் ரூபா 4,309,400 தொகை 2 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருந்தது.

(உ) 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முற்பணக் கணக்கில் ரூபா 2,691,852 தொகை காட்டப்பட்டிருந்ததுடன் அதில் 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்குரிய முறையே ரூபா 1,727,547, ரூபா 75,249 மற்றும் ரூபா 108,802 தொகைகளான மீதிகள் இருந்தன.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

02 விடயங்களுக்குரிய ரூபா 11,409,100 கூட்டு மொத்த தொகை தொடர்பான மீதிகளின் உறுதிப்படுத்தல்கள், விபரமான பட்டோலை, மெய்மையாய்வு அறிக்கை முதலியன

சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது அவற்றினை திருப்திகரமாகச் சான்றுறுதி செய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 83,386,233 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 52,230,891 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 31,155,342 வீழ்ச்சியினைக் சுட்டிக்காட்டுகின்றது.

#### 2.1.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதிகாரசபையின் வருமானக் கூற்றினை பகுப்பாய்வு செய்யும் போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வருமானச் செலவுகளை மேற்கொள்வதற்காக அரசாங்க மானியமாக வழங்கப்பட்ட தொகையில் ரூபா 4,260,000 குறைவு ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் இது 6% ஆல் குறைவாகும். அவ்வாறே அதிகாரசபையின் செய்ற்பாட்டு வருமானம் ரூபா 3,756,658 ஆல் அதிகரித்திருந்ததுடன் செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 30,112,867 ஆல் அதிகரித்திருந்தன. அவ் வருமான அதிகரிப்புச் சதவீதம் 6% ஆக இருந்ததுடன் செலவு அதிகரிப்புச் சதவீதம் 14% ஆக இருந்தது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 2.2.1 செயலாற்றல்

(அ) மீளாய்வாண்டின் போதும் கடந்த 2 ஆண்டுகளிலும் அதிகார சபையின் ஒவ்வொரு விளையாட்டரங்கினாலும் உழைத்த வருமானமும் செலவுகளும் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| விளையாட்டரங்கு | | 2008 | | | 2009 | | | 2010 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | செலவுகள் | மிகை / பற்றாக்குறை | வருமானம் | செலவுகள் | மிகை / பற்றாக்குறை | வருமானம் | செலவுகள் | மிகை / பற்றாக்குறை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| உள்ளக விளையாட்டரங்கு | 31 | 62 | (31) | 34 | 71 | (37) | 40 | 142 | (102) |
| திறந்தவெளி விளையாட்டரங்கு | 17 | 30 | (13) | 16 | 34 | (18) | 16 | 48 | (32) |
| போகம்பரை விளையாட்டரங்கு | 04 | 14 | (10) | 04 | 18 | (14) | 03 | 21 | (18) |
| ஆர்.பிரேமதாஸா விளையாட்டரங்கு | 03 | - | 03 | 03 | - | 03 | 03 | - | 03 |
| பெலியத்த விளையாட்டரங்கு | - | - | - | 0.4 | 01 | (0.6) | 0.1 | 02 | (1.9) |
| மொத்தம் | 55 | 106 | (51) | 57.4 | 124 | (66.6) | 62.1 | 213 | (150.9) |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உள்ளக விளையாட்டரங்கின் வருமான அதிகரிப்புச் சதவீதம் 10% இலிருந்து 18% வரை காணப்பட்டது. இதனுடன் ஒப்பிடப்பட்டு செலவு அதிகரிப்புச் சதவீதம் 13% இலிருந்து 100% வரையாகும். இதற்கிணங்க ஒவ்வொரு ஆண்டும் வருமான அதிகரிப்புச் சதவீதத்தினைவிட அதிக வேகத்தில் செலவு அதிகரித்திருந்தது.

(ii) திறந்த வெளி விளையாட்டரங்கில் வருமானம் குறைந்து செல்லும் போக்கினைக் காணக்கூடியதாக இருந்ததுடன் செலவு மிகவும் உயர்ந்த பெறுமதியினைக் கொண்டிருந்தது.

(iii) போகம்பர விளையாட்டரங்கிலும் வருமான மட்டம் 2010 ஆம் ஆண்டின் போது குறைவடைந்திருந்ததுடன் செலவுகள் 17% இலிருந்து 26% வரை அதிகரித்திருந்தது.

(iv) 2010 ஆம் ஆண்டின் போது பெலியத்த விளையாட்டரங்கின் வருமானம் 69% ஆல் குறைவடைந்திருந்ததுடன் செலவு 68% ஆல் அதிகரித்திருந்தது. இதற்கிணங்க மேற்கூறிய விளையாட்டரங்குகளின் வருமானத்தினை அதிகரிப்பதற்கு செயற்திறனான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையும் செலவுகள் உரிய முறைப்படி முகாமைத்துவம் செய்யப்படாமையும் இந்நிலைமைக்குத் தாக்கமளித்துள்ளது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் கடந்த 2 ஆண்டுகளுக்காக அதிகாரசபையின் ஒவ்வொரு விளையாட்டரங்கிலும் இடம் பெற்ற மொத்த விளையாட்டுப் போட்டிகளும் விழாக்களும் தொடர்பான குறிப்பு ஒன்று கீழே காட்டப்படுகின்றது.

| விபரம் | உள்ளக விளையாட்டரங்கு | | | திறந்த வெளி விளையாட்டரங்கு | | | போகம்பரை விளையாட்டரங்கு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2008 | 2009 | 2010 | 2008 | 2009 | 2010 | 2008 | 2009 | 2010 |
| விளையாட்டுப் போட்டிகள் | 22 | 55 | 29 | 108 | 162 | 168 | 61 | 80 | 57 |
| இசைக் கண்காட்சிகள் | 04 | 05 | 11 | - | - | - | - | - | - |
| பரீட்சைகளும் கருத்தரங்குகளும் | 12 | 16 | 27 | - | - | - | - | - | - |
| ஏனையவை | 13 | 35 | 17 | 07 | 423 | 306 | 235 | 54 | 46 |
| மொத்தம் | 51 | 111 | 84 | 115 | 585 | 474 | 296 | 134 | 103 |

### 2.2.2 பாதீடு செய்யப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு மதிப்பீடுகளின் பிரகாரம் 400 X 200 மீற்றர் அஞ்சல் ஓட்ட ஓடுபாதையினை மீண்டும் உருவாக்குவதற்கும் நீச்சல் தடாகத்தில் நீர் கசிவது தொடர்பாக பரிசோதனை செய்து செயன்முறைப்படுத்தல் ஆகிய இரண்டு விடயங்களுக்காக ரூபா 50,500,000 கூட்டு மொத்தத் தொகை அங்கீகரிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போதும் ஒரு செயற்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

(ii) கிராமங்களில் விளையாட்டுக்களை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு விளையாட்டுக்கள் தொடர்பான பயிற்சி நெறிகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்துதல் அதிகாரசபையின் பிரதான செயற்பாடாகக் காட்டப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது அதற்காக பாதீட்டில் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 குத்தகை உடன்படிக்கைகளில் குறைபாடு

ஆர். பிரேமதாஸா விளையாட்டரங்கினை இலங்கை கிரிகட் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கும் குத்தகை உடன்படிக்கையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | குத்தகை உடன்படிக்கையின் நிபந்தனைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | உடன்படிக்கையின் 4(எஸ்) பிரிவின் பிரகாரம் விளையாட்டு மைதானத்தின் அனைத்து கட்டிடங்கள் மற்றும் இடவசதிகளுக்காக குத்தகை மதிப்பீட்டாளர்களிடமிருந்து ஆலோசனை பெற்று குத்தகைதாரரினால் முழுமையான காப்புறுதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டு வரை அவ்வாறான காப்புறுதி பெற்றுக்கொள்ளப்படவில்லை. | விளையாட்டரங்கின் அனைத்து கட்டிடங்கள் மற்றும் இடவசதிகளுக்கான நட்டத்தினை ஈடுசெய்ய முடியாதிருத்தல். |
| (ஆ) | 30 ஆண்டுகால நீண்ட காலத்திற்கான குத்தகைப் பெறுமதியானது காலாண்டிற்கு ரூபா 750,000 ஆக நிரந்தரமாகப் பேணுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | பணத்தின் பெறுமதி குறைவடைந்து செல்லுதல் என்ற அடிப்படையில் உருவாகின்ற எதிர்கால பாதகமான நிலைமையினைத் தவிர்த்துக் கொள்வதற்காக குத்தகைப் பெறுமதிக்குச் செய்யப்பட வேண்டிய திருத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. |

### 2.2.4 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள முடியாது களஞ்சியத்தில் காணப்படுகின்ற 13 விடயங்களுக்கான பொருள் இருப்பு ஒன்று ஏல விற்பனைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அவை இருப்பேடுகளில் உள்ளடக்கப்பட்ட இருப்புக்களாக இல்லாததுடன் மெய்மையாய்வு செய்து பொருட்களை வகைப்படுத்தி ஏல விற்பனை செய்வதற்காக வழங்கப்படவில்லை.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் போது கிலின்கோ தனியார் கம்பனியிடமிருந்து (Ceylinco Cisco Security Co.) ரூபா 4,912,403 தொகைக்கு ‘‘டீ’’ வாகன தரிப்பிடத்திலுள்ள மின்னியக்க தடை இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. தற்பொழுது இந்த இயந்திரம் செயற்பாடற்ற நிலையில் காணப்படுவதுடன் அதனை சிறந்த நிலைக்கு கொண்டு வருவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) கொள்வனவு செய்த சந்தர்ப்பத்தில் தொழில் நுட்பக் குழுவின் அறிக்கைக்கு இணங்க உரிய உபகரணத்தில் பின்வரும் வசதிகள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தும் அவ்வாறான வசதிகள் இல்லை என்பது உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

- இலக்கத் தகட்டினைக் அடையாளம் கண்டுகொள்ளும் முறைமை
- மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய வாகனங்களை சுயமாகவே அடையாளம் கண்டுகொள்ளல்.
- ஏதேனும் வகுப்பு அல்லது ஏதேனும் வகையைச் சார்ந்த வாகனத்தினை சுயமாகவே இனங்கண்டு கொள்வதற்கு அதிலுள்ள அறிந்து கொள்ளும் தன்மை
- வாகனம் வெளிச்சென்ற பின்னர் வீதித்தடை வாயில் அல்லது ஏனைய வாயில்கள் சுயமாக மூடிக்கொள்வதற்கு இந்த வாகன அவதானிப்பு உபகரணத்தினைப் பயன்படுத்தல்.

### 2.2.5 இனங்காணப்பட்ட நட்டம்

அதிகார சபையின் நீச்சல் மற்றும் சுழியோடல் தடாகத்தினை திருத்துதல் நடவடிக்கை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் கைவிடப்பட்டதன் காரணமாக அதிகார சபை ரூபா 3,513,212 தொகையான நட்டம் அடைய வேண்டி ஏற்பட்டது.

### 2.2.6 ஆளணிக் கிரயம்

முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் DMS/C/4/5 YA – 5 ஆம் இலக்க 2006 திசெம்பர் 12 ஆந் திகதிய கடிதம் மற்றும் DMS/E4/40/5/252/2 ஆம் இலக்க 2010 சனவரி 28 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக பதவியணியினை மீளமைத்தல் இடம்பெறமுடியாதிருந்தது.

### 2.2.7 கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிரூபத்தின் பிரகாரம் நிறுவனத்திற்குச் சொந்தமான வளங்கள், தாபனத் திட்டம், கடந்த மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள் முகாமையாளர்களின் கடமைப் பொறுப்புக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய கூட்டத்திணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.8 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகளுக்கிடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 2.2.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 4,229,175,680 தொகையான நிலையான சொத்துக்களும் ரூபா 9,145,701 தொகையான பதிவேட்டுப் பொருட்களும் தொடர்பாக மெய்மையாய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவருக்கு அறிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஆ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றுநிரூப அறிவித்தல்களுடன் இணக்கமின்மை

(இ) கடன்பட்டோரிடமிருந்து பணத்தை அறவிடல்

(ஈ) வருமான முகாமைத்துவம்